# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

கொள்கை விளக்கக் குறிப்பு
2021 – 2022

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 2-21 |
| 3. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 22-31 |
| 4. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு | 32-41 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 41-55 |
| 6. | முடிவுரை | 56 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண்.37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவானது, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றது. இத்துறையில் கீழ்க்கண்ட மூன்று அமைப்புகளும் ஒரு பொதுத் துறை நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன:–

i. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் (Commissionerate of Prohibition and Excise)

ii. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (Prohibition Enforcement Wing)

iii. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

(Narcotic Intelligence Bureau CID)

iv. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

(Tamil Nadu State Marketing Corporation Limited)

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை, பின்வரும் பரந்த குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுத்தும் பொறுப்புடைய அலுவலர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார்:–

- 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள பல்வேறு விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

- எவ்வித விடுபாடுமின்றி அரசுக்கு அதிகபட்ச வருவாய் கிடைத்தலை உறுதி செய்தல்.
- மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ளச்சாராயம் விற்பனை செய்வதை தடுத்தல் மற்றும் மாநில எல்லை வழியாக போலி மதுபானம் வருவதை தடுக்க சோதனைகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் துணை கொண்டு மேற்கொள்ளுதல்.

2.2 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையை நடைமுறைப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் 2 இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித்துறை) நிலையில் 1 நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 5 உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

மாவட்ட அளவில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக துணை / உதவி ஆணையர்கள் (கலால்) பணிபுரிந்து வருகின்றனர்.

2.3 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சாராவி / இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் / பீர் / ஒயின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்துதல், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தலை கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்காணும் பணிகளை இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்கொள்ளும் பொருட்டு வருவாய்த் துறையைச்

சார்ந்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)**

2.4 சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses), சாராவி உற்பத்தி (Spirit Production) செய்வதற்கான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், தெளிந்த சாராவி (Rectified Spirit), சுத்திகரிக்கப்பட்ட சாராவி (Extra Neutral Alcohol), கால்நடைத்தீவனம் (Cattle feed) முதலியவற்றைத் தயாரிக்கத் தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டை (Molasses), இருப்பு மற்றும் தேவைக்கேற்ப ஒதுக்கீடு

செய்ய அதிகாரமுடையவர் ஆவார். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் உரிய அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி உற்பத்தி**
**(Distilleries and Spirit Production)**

2.5 மது உற்பத்தி செய்ய மூலப்பொருளான சாராவியைத் தயாரிக்க 18 வடிப்பாலைகள் (Distilleries) தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றில் 16 வடிப்பாலைகள் (Distilleries) தனியார் துறையிலும், 2 கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

**தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (GENA)**

2.6 தமிழ்நாட்டில் தானியங்களை அடிப்படையாகக் கொண்டு சாராவி உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் இல்லாத நிலையில், தமிழ்நாட்டிலுள்ள இந்தியத்

தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், உயர்தர மதுபான வகைகளைத் தயாரிக்க, தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவியினை இறக்குமதி செய்வதற்கு அரசின் முன் அனுமதியைப் பெற்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி வழங்கப்படுகிறது. 2020–2021–ஆம் ஆண்டில், 5.71 கோடி லிட்டர் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**எத்தனால்**

2.7 கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து பெறப்படும் எத்தனால் ஒரு புதுப்பிக்கத்தக்க உயிரி எரிபொருள் ஆகும். இதன் மாசற்ற தன்மையால் இதனை பெட்ரோலுடன் எளிதாகக் கலக்க இயலும். இந்திய அரசின் தேசிய உயிரி எரிபொருள் செயல்முறைத் திட்டத்தில் எத்தனால் பெட்ரோலுடன்

கலப்பது ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 18 வடிப்பாலைகளில் (Distilleries), 12 வடிப்பாலைகளில் (Distilleries) எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

2.8 தமிழ்நாட்டில் 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன.

**பீர் ஏற்றுமதி**

2.9 தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது,

**அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி**

2.10 அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, 1981–ஆம் ஆண்டின்

தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டு மதுபானங்களின் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் 02.03.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் முகமை நிறுவனமாக (Nodal Agency) நியமிக்கப்பட்டு, எப்.எல்.2 உரிமதாரர்கள் (மனமகிழ் மன்றங்கள்) மற்றும் எப்.எல்.3 உரிமதாரர்கள் (மூன்று நட்சத்திர மற்றும் அவற்றிற்கு குறைவான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள் மற்றும் நட்சத்திரத் தகுதி பெறாத உணவு விடுதிகள்), எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்ய ஏதுவாக சிறப்புக் கட்டணத் தொகையில் 3 விழுக்காடு சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

2.11 எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திர மற்றும் அவற்றிற்கு அதிகமான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள்) பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்களை விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வை பிணைமுறி கிடங்குகளில் (Excise Bonded Warehouses) இருந்து இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானங்களைத் தொடர்ந்து நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.

2.12 அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலமாக 2020–2021–ஆம் ஆண்டில் சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.23.98 கோடியும் மற்றும் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.2.14 இலட்சமும் வருவாய் கிடைத்துள்ளது.

**நீரா**

2.13 நீரா என்பது தென்னை மரத்தின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு எதிர்ப்பு தொழில்நுட்பத்தினை (Anti Fermentation

Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானம் ஆகும். "தமிழ்நாடு நீரா விதிகள்" என்ற விதிகளை இயற்றி, தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும், நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிக்கவும் அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.14 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் (Companies Act, 2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது 1983–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே நீராவினை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெறத் தகுதி பெற்றவை ஆகும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் தென்னை வளர்ச்சி வாரியத்திலும் பதிவு

செய்யப்பட்டிருக்க வேண்டும். உரிமங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.

**பதநீர்**

2.15 பதநீர் என்பது பனை மரம், ஈச்ச மரம் மற்றும் அவை போன்ற மரங்களின் பூம்பாளையிலிருந்து, நொதிக்க விடாமல் சேகரிக்கப்படும் பிரபலமான ஊட்டச்சத்து பானமாகும். பதநீரை சேகரிக்கவும், இருப்பு வைத்துக் கொள்ளவும், கொண்டு செல்லவும், விற்பனை செய்யவும், விநியோகம் செய்யவும் மற்றும் பதநீரிலிருந்து பொருட்களைத் தயாரிக்கவும் உரிமம் வழங்க ஏதுவாக, ஏற்கனவே இருந்த 1939–ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீரா அல்லது பதநீர் விதிகளை மாற்றி அமைத்து, "தமிழ்நாடு பதநீர் விதிகள்" என்ற விதிகளை இயற்றி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**மாநில ஆய வில்லைகள்**

2.16 போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலை கட்டுப்படுத்தவும், மதுபானத் தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள்/ பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்கு செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதி செய்யவும், காகித ஆய வில்லைகளுக்கு பதிலாக நகலெடுக்க முடியாத செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகளை ஒட்டும் நடைமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ளது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாக 27 கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகின்றன. 2020–2021–ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள நிகர வருவாய் ரூ.21.13 கோடியாகும்.

**உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம்**

2.17 ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம், வடிப்பகம் மற்றும் வடிப்பகம் அல்லாத மதுபானங்களுக்கென தர நிர்ணயம் செய்யும் வகையில், 2018–ஆம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் (மதுபானங்களின் தரங்கள்) ஒழுங்குமுறைகளை, 01.04.2019 முதல் செயல்படுத்தும் வகையில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

**மின் ஆளுமை நடவடிக்கைகள்**

2.18 உரிமங்கள் வழங்குதலில் வெளிப்படைத் தன்மையினை உருவாக்கவும், உரிமங்களைப் புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் வகையிலும் இணையதள செயலிகள் மூலமாக

கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

அ) எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்களுக்கு அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.

ஆ) வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்,

இ) எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

**மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

2.19 முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்காக அரசால் நிதியுதவி கடனாக வழங்கப்பட்டது. தற்போது இந்நிதியுதவியானது ரூ.5.00 கோடியாக

உயர்த்தப்பட்டு, கடனாக இல்லாமல் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2.20 ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய மறுவாழ்வுக் குழு அமைக்கப்பட்டு, இந்த திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக மானியம் வழங்கப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 3. | முதுநிலை மண்டல மேலாளர் (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்) | உறுப்பினர் |
| 4. | துணைஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்) | உறுப்பினர் |

2.21 அடையாளம் கண்டறியப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும், நிரந்தர வருவாய் ஈட்டும்

பொருட்டு, ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொள்ள மானியமாக அதிகபட்சமாக ரூ.30,000/- வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

2.22 இத்திட்டத்தினை செயல்படுத்த நடப்பாண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு**

2.23 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மாவட்டங்களில் மேற்கொள்ளும் வகையில்

ரூ.3.50 கோடி நிதியானது அரசால் ஒப்பளிக்கப்பட்டது. அதில் ரூ.3.25 கோடி தொகையானது அனைத்து மாவட்டங்களுக்கும், காவல்துறையின் அமலாக்கப் பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

எஞ்சிய தொகையான ரூ.25.00 இலட்சம் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ள காவல்துறை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2.24 ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2. | மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 3. | மாவட்ட காவல் கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 4. | முதன்மைக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5. | துணை ஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்) | உறுப்பினர்–அமைப்பாளர் |
| 6. | மக்கள் தொடர்பு அலுவலர் | உறுப்பினர் |

2.25 அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வுப் பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலிப் பேரணி போன்றவை மூலம் மாணவ மாணவிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் துணை கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துவதால் பாதிக்கப்படக்கூடிய மக்களை உள்ளடக்கிய வாழ்விடங்களை இலக்காகக் கொண்டு, மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, குழுக் கலந்துரையாடல், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் இணைய வழி வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, பொதுமக்களுக்கு டி–சர்ட், பயணப் பை மற்றும் நாட்காட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் தெரு நாடகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், மாவட்ட வாரியாக பெரிய அளவிலான விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டு, பேரணியின் போது, மது அருந்துவதற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக்

கழகங்களுக்கு மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த ஒட்டும்வில்லைகள் அளிக்கப்பட்டு, பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

**போதை மீட்பு மையங்கள்**

2.26 மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் போதை மீட்பு மையங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 19 போதை மீட்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

3.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், பதுக்கி வைத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழித்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுத்தல் ஆகியவை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் முக்கியப் பணிகள் ஆகும்.

3.2 காவல்துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் காவல் கண்காணிப்பாளரின் கீழ் ஒரு மத்திய புலனாய்வுப் பிரிவும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) கீழ் தலா ஒரு பிரிவும் இயங்கி வருகின்றன. சென்னையில் உள்ள மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும்,

6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும். 1 தலைமைக் காவலரும் மற்றும் 1 இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 தமிழ்நாட்டில் 96 அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டங்கள் / நகரங்களில் உள்ள காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் காவல் கூடுதல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின்கீழ்

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

3.4 இவை தவிர, தீர்வை செலுத்தப்படாத / போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உறைகள் ஆகியவை அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்கும் வகையில், தமிழ்நாட்டில் மொத்தம் 45 நிரந்தர சோதனைச் சாவடிகளும், 7 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன. தேவையின் அடிப்படையில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.5 **அண்டை மாநிலங்களிலிருந்து போலி மதுபானம் மற்றும் எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:–**

(i) பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் (CDR Analysis) ஆகியவற்றின் உதவியுடன் எரிசாராய கடத்தல், போலி மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தல் ஆகிய குற்றங்களைத் தடுப்பதுடன், இக்குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ii) எரிசாராயம் மற்றும் போலி மதுபானக் கடத்தலைக் கண்காணிக்கவும், மதுவிலக்கு அமலாக்கம் தொடர்பான குற்றங்கள் குறித்து திறம்பட விசாரணை மேற்கொள்ளவும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் மென்பொருள் (CDR Analysis Software) வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(iii) அமலாக்க வழக்குகளில் கைப்பற்றப்பட்டு, ஏலம் விடப்பட்ட வாகனங்கள் மீண்டும் அதே குற்றங்களுக்காக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, வாகனங்கள் ஏலம் விடப்படுவதை நிறுத்தி, அவற்றை அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கு உட்படுத்தவோ அல்லது விதிகளின்படி அழிக்கவோ அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

(iv) தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். இது போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காகக் கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் சோக நிகழ்வுகளும் (இறப்புகள்) நிகழ்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் ஆளிநர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின்

அடிப்படையில் திடீர் வாகனத் தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2020-2021-ஆம் ஆண்டில் திடீர் வாகனத் தணிக்கைகள் மூலம் 1,65,544 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 9 லாரிகள், 3 ஈப்புகள், 75 வேன்கள், 255 கார்கள், 120 ஆட்டோக்கள் மற்றும் 3,759 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 4,224 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

3.6 எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து மதுபானம் கடத்துதல் தொடர்பாக தகவல்கள் தரும் இரகசிய தகவலாளர்களுக்கு பண வெகுமதி வழங்கும் வகையில் ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2020-2021-ஆம் ஆண்டிற்கான

பண வெகுமதி வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

3.7 2020–2021–ஆம் ஆண்டில் 2,95,941 லிட்டர் கள்ளச்சாராயம், 75,720 லிட்டர் எரிசாராயம், பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 17,53,694 மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்குக் குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 4,224 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

3.8 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக "மெத்தனால்" என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் "மெத்தனால்" எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு அதனை, 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு

மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல், வெளியிடங்களில் இருந்து பெறுதல், விற்பனை செய்தல் போன்றவற்றை கவனமாகக் கட்டுப்படுத்திட, 1959–ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை வைத்திருக்க மற்றும் பயன்படுத்த உரிமம் பெற்ற நிறுவனங்கள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

**கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்**

3.9 கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்ட அளவில் விழிப்புணர்வுப் பேரணி, கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், தெருமுனைப் பிரச்சாரம், துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் போன்றவை மூலமாக தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன, மேலும், மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், கட்டுரை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**மதுவிலக்கு உதவி மையம் – 10581**

3.10 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராய

விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண். 10581 ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இந்த உதவி எண் 24 மணி நேரமும் காவல்துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

3.11 கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் திறம்பட செயல்படும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு "காந்தியடிகள் காவலர் பதக்கம்" ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

## 4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

4.1 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முக்கிய பணிகளாகக் கொண்ட போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வுத் துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 15 இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் இயங்கி வருகின்றன.

**நிர்வாக அமைப்பு**

4.2 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது, காவல்துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் தலைமையிலும், காவல்துறை தலைவர் (குற்றம்) (போதைப் பொருள் தடுப்புப் படை) அவர்களின் மேற்பார்வையிலும், 1 காவல் கண்காணிப்பாளர், 1 காவல் கூடுதல் கண்காணிப்பாளர், 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 126 இதர நிலைக் காவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

**தமிழ்நாடு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:–**

**போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் புள்ளி விவரங்கள்**

4.3 2020–2021–ஆம் ஆண்டில், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது 579 வழக்குகளைக்

கண்டறிந்து, 670 குற்றவாளிகளைக் கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து 4,690 கிலோ உலர் கஞ்சா, 1.818 கிலோ ஹெராயின், 300 கிராம் எம்.டி.எம்.ஏ., 86.772 கிலோ மெத்தாம்பிடாமின், 8.09 கிலோ ஆம்பிட்டமைன், 200 கிராம் ஹாஷிஷ், 300 கிராம் கொகெயின், 8 கிராம் எல்.எஸ்.டி. வில்லைகள், 2.051 கிலோ ஓப்பியம், 26.02 கிலோ சாரஸ் மற்றும் 4.4 கிலோ மெத்தாகுலோன் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.10.71 கோடி ஆகும்.

## 4.4 2021–2022–ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

1. போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக அமலாக்கம் செய்வது குறித்து, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினருக்கு பயிற்சி அளித்தல்.
2. அண்டை மாநிலங்களிலிருந்து வரும் அதிகப்படியான போதைப் பொருட்களைத் தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளுதல்.

3. மலைப் பிரதேசங்களில் கஞ்சா செடி வளர்ப்பைத் தடுக்க தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.

4. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவதைத் தடுக்க வனத்துறையினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

5. போதைப் பொருள் கடத்தும் குற்றவாளிகள் மீது தடுப்புக்காவல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

6. மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணுதல்.

7. குற்றப்பிரிவில் உள்ள குற்ற ஆவணக் காப்பகத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஒப்பிட்டு, போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்துதல்.

8. வழக்கமான போதைப் பொருள் குற்றவாளிகளைக் கண்டறிந்து கண்காணித்தல்.

9. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகளை சிறப்பாக மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

10. கொடுங்குற்ற வழக்குகளை கலந்தாய்வு கூட்டத்தில் ஆய்வு செய்து நமூனாக்கள் மூலம் அறிவுறுத்துதல்.

11. விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க சிறப்பாக மேற்பார்வையிடுதல்.

12. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர் மூலம் பொது இடங்களில், குறிப்பாக கல்வி நிறுவனங்களின் அருகில் சோதனை செய்து, அங்கு போதைப் பொருள் விற்பனையைத் தடுத்தல்.

13. தனியார் தூதஞ்சல் (Courier) நிறுவனங்களைப் பற்றிய நுண்ணறிவுத் தகவலை சேகரித்து சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்துதல்.

14. 1985–ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்படி போதைப் பொருள் தடுப்புப் பிரிவுகளுடன் இணைந்து சோதனைகள் மேற்கொள்ளுதல்.

**15.** போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு காவல் துறையினர் மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்துக் கடைகளை சோதனை செய்தல்.

**1988–ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (PITNDPS Act – 1988)**

4.5 ஒன்றிய அரசால் இயற்றப்பட்ட 1988–ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988), 1988–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1–ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும்

இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைக்கலாம்.

## சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள் அனுசரித்தல்

4.6 போதைப் பொருட்கள் பயன்படுத்துதலைத் தடுக்கவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கவும் பொதுமக்கள் மத்தியில் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் திங்கள் 26–ஆம் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக சமூக ஊடகங்களான முகநூல் மற்றும் யூ–டியூப் சேனல்களில் விழிப்புணர்வு காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டதுடன், பிரபல செய்தி தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டன. மேலும், பண்பலை வானொலிகளிலும் விழிப்புணர்வு செய்திகள் ஒலிபரப்பு செய்யப்பட்டன.

**போதைப் பொருள் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைத்தல்**

4.7 2020–2021–ஆம் ஆண்டில், 16 போதைப் பொருள் குற்றவாளிகள், 1982–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், (தமிழ்நாடு சட்டம் 14/1982) சிறையில் அடைக்கப்பட்டனர்.

**கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தை தடுக்க எடுக்கப்பட்டுள்ள தீவிர தடுப்பு நடவடிக்கைகள்**

4.8 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் அருகில் போதைப் பொருட்களின் விற்பனையைத் தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**பிற மாநிலங்கள் / நாடுகளிலிருந்து போதைப் பொருள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்**

4.9 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் என்ற ஒன்றிய அரசின் சட்டம், 1985–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு, ஒன்றிய அரசின் நேரடிக்

கட்டுப்பாட்டில் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. தமிழ்நாடு போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில், இப்பிரிவைச் சார்ந்த அதிகாரிகளுக்கு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்புப் பயிற்சிகள் போதைப்பொருள் தடுப்புப் பிரிவால் அளிக்கப்படுகிறது. போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமான முக்கியமான தகவல்கள் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

5.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) 23.05.1983 அன்று, 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act, 1956) கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.

5.2 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை

தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை, 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C(1–A)(a)–இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23.05.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை செய்து வருகிறது. மேலும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C(1–B)(a)–இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை செய்து வருகிறது. இவை தவிர, இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

5.3 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, அரசு செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**பங்கு மூலதனம்**

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.15.00 கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது .

**பதிவு அலுவலகம்**

5.5 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), நிறுவனச் செயலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**மண்டல அலுவலகங்கள்**

5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் 5 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

**சிறப்பு பறக்கும் படை**

5.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு 5 சிறப்பு பறக்கும் படைகள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மண்டல தலைமை அலுவலகங்களில் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

**மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்**

5.8 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, 31.07.2021 அன்றுள்ளவாறு, 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், 43 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், 5,402 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் இக்கடைகளுடன் இணைந்த 2,808 மதுக்கூடங்களும் உள்ளன.

5.9 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் உள்ள 43 மதுபானக் கிடங்குகளில் 31 மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

**சில்லறை விற்பனைப் பணியாளர்கள்**

5.10 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 31.07.2021 அன்றுள்ளவாறு, 6,761 கடை மேற்பார்வையாளர்களும், 15,090 விற்பனையாளர்களும் மற்றும் 3,158 உதவி விற்பனையாளர்களும் ஒப்பந்த / தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இப்பணியாளர்களுக்கான தொகுப்பூதியமானது உயர்த்தி வழங்கப்படுகிறது.

**சில்லறை விற்பனைப் பணியாளர் நலத்திட்டங்கள்**

5.11 சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் போனஸ் மற்றும் கருணைத் தொகையானது அரசின் உத்தரவிற்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. இந்தப்

பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சில்லறை விற்பனைக் கடைகளின் அமைவிடம்**

5.12 2003–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில், விதி 8–இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி, மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை எந்த இடத்தில் நிறுவ வேண்டும் என்பது தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்ற ஆணைக்கிணங்க, மதுபான

சில்லறை விற்பனைக் கடைகளை அமைப்பதற்கு விரிவான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது.

**மதுபான வகைகள் கொள்முதல்**

5.13 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்து வருகிறது.

**இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள் மூலம் விற்பனை செய்தல்**

5.14 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 482 வகையான வெளிநாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளை 234 எப்.எல்.11 உரிமம் பெற்ற சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்கிறது.

**சில்லறை விற்பனைக் கடைகளில் குளிர்சாதனப் பெட்டி வசதிகள்**

5.15 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் அதன் சில்லறை விற்பனைக் கடைகளில், 400 லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட 1,375 குளிர்சாதனப் பெட்டிகளையும், 100 லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட 375 குளிர்சாதனப் பெட்டிகளையும் ரூ.4.50 கோடி செலவில் கொள்முதல் செய்து நிறுவியுள்ளது.

**கண்காணிப்பு கேமராக்கள், எச்சரிக்கை ஒலி சாதனங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் நிறுவுதல்**

5.16 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும் அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 38 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 40 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் எச்சரிக்கை ஒலி சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தில் உள்ள

மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில், அதிகமாக பாதிக்கப்படக் கூடிய 3000 கடைகளில் இரவுப் பார்வை கொண்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கண்காணிப்பு கேமராக்கள் திருட்டுக்களை குறைப்பதற்கு மட்டுமல்லாமல் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய தனிநபர்களை கண்டுபிடிக்கவும் மதுபானக் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் ஏதேனும் நடந்தால் அவற்றை அடையாளம் காணவும் வழிவகை செய்கிறது. இந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து மதுபானக் கிடங்குகளிலும் மற்றும் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் தீயணைப்புக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

**இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணைய உரிமம்**

5.17 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் 2006–ஆம் ஆண்டின் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

**பணப் பாதுகாப்பு பெட்டகம் நிறுவுதல்**

5.18 நகர மற்றும் கிராம பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்படும் மதுபானக் கடைகளுள், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள 2,825 மதுபானக் கடைகளில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் ஒவ்வொன்றும் 300 கிலோவிற்கு மேல்

எடை கொண்டவை மற்றும் பிற கருவிகளால் பழுது ஏற்படுத்த இயலாதவை ஆகும். பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் மதுபானக் கடைகளின் தரையில் பதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பின்புறமும், மேல் பகுதியிலும், வலது மற்றும் இடது என இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளன. கடைப் பணியாளர்கள் விற்பனை செய்த தொகையினை விற்பனை நேரம் முடிந்த பிறகு பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த பணப் பாதுகாப்பு பெட்டகம் உதவுகிறது.

**மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவுதல்**

5.19 பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் பொருட்டு, மின்னணு தொழில்நுட்பம் வாயிலாக விற்பனைத் தொகையை செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

**கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள்**

5.20 கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதை தடுக்க தமிழ்நாடு அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளுக்கு இணங்க, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், மதுபானக் கிடங்குகள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் அரசின் நிலையான இயக்க நடைமுறைகளுக்கு ஏற்ப தேவையான தடுப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன.

**மதுவிற்பனை இல்லாத நாட்கள்**

5.21 தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய 8 நாட்கள் மது விற்பனை இல்லாத நாட்களாக

அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

5.22. அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

| வரிசை எண் | ஆண்டு | (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|---|
| | | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
| 1 | 2003-04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004-05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005-06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006-07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007-08 | 4764.05 | 4057.11 | 8821.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 2008–09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009–10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010–11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011–12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012–13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013–14 | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12 | 2014–15 | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13 | 2015–16 | 5836.01 | 20009.57 | 25845.58 |
| 14 | 2016–17 | 6248.17 | 20747.08 | 26995.25 |
| 15 | 2017–18 | 6009.25 | 20788.71 | 26797.96 |
| 16 | 2018–19 | 6863.11 | 24294.72 | 31157.83 |
| 17 | 2019–20 | 7205.97 | 25927.27 | 33133.24 |
| 18 | 2020–21 | 7821.69 | 25989.46 | 33811.14 |
| 19 | 2021–22 (*) (31.07.2021 வரை) | 1975.24 | 5932.37 | 7907.61 |

**(*) ஒத்திசைவுக்கு உட்பட்டது .**

## 6. முடிவுரை

மனித உயிரிழப்புகளைத் தடுப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, கள்ளச்சாராயம், போலியான, தரமற்ற மதுவகைகளை ஒழித்திடும் வகையிலும், மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளின் விற்பனையைத் தடுத்திடும் வகையிலும், இந்த அரசு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையினை சீரிய முறையில் செயல்படுத்தும்.

**V செந்தில்பாலாஜி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்